ADIP Assessment and Distribution camp 12.09.21

தின ஓசை
DINA OSAI
காலை நாளிதழ்

புவனகிரியில் ரோட்டரி சங்கம் சார்பில்

# மாற்று திறனாளிகளுக்கு இலவச செவி திறன் கருவி, நடை துணைக்கோல் கருவி வழங்கல்



கடலூர்

கடலூர் மாவட்டம் புவனகிரியில் ரோட்டரி சங்கம் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் சார்பில் மாற்று திறனாளிகளுக்கு இலவச செவித்திறன் குறைபாடு கருவி மற்றும் பார்வையற்றோருக்கான நடை துணைக்கோல் கருவி வழங்கும் நிகழ்ச்சி புவனகிரியிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது நிகழ்ச்சியை ரோட்டரி சங்க பொருளாளர் டாக்டர் செல்வராஜ் வரவேற்றார். தலைவர் புனித ராம்ராஜ் தலைமை தாங்கினார். துணை ஆளுநர் கமல்சந்த் வாழ்த்துரை வழங்கினார் மாவட்ட ஆளுநர் தேர்வு செல்வநாதன் சிறப்புரையாற்றினார் நிகழ்ச்சியில் சுமார் 50 க்கும் மேற்பட்ட மாற்று திறனாளிகளுக்கு காது கேட்கும் கருவி பார்வையற்றோருக்கு நடை துணைக்கோல் உள்ளிட்டவை வழங்கப்பட்டது மேலும் நிகழ்ச்சியில் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் முடிவில் செயலாளர் ஹபிப் ரகுமான் நன்றியுரை கூறினார்

Dina Osai 13.09.21

# மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்



புவனகிரி ரோட்டரி சங்கம் சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கினர்.

**புவனகிரி, செப். 15–**

புவனகிரி ரோட்டரி சங்கம் சார்பில் இலவச மருத்துவ முகாம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

சங்கத் தலைவர் புனித ராம்ராஜ் தலைமை தாங்கினார். செயலர் ஹபிப் குமார் வரவேற்றார்.

நிர்வாக செயலர் செல்வராஜ் விஜயபிரபு, கடவுள் வாழ்த்து பாடினார். பொருளாளர் செல்வராஜ் முன்னிலை வகித்தார். முகாமில் சுற்றுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் பங்கேற்று பரிசோதனை செய்து கொண்டனர்.

முன்பதிவு செய்தவர்களுக்கு கருவிகளை ரோட்டரி மாவட்ட ஆளுனர் செல்வநாதன், துணை ஆளுனர் கமல்சந்த் வழங்கினர்.

முகாம் ஒருங்கிணைப்பாளர் முருகவேல் நன்றி கூறினார். இதர நோயாளிகளுக்கு மருந்து மாத்திரைகள் வழங்கினர்.

Dinamalar 15.09.21